
# அரங்க விழா 2018



வெறுவெளி, நுண்கலைத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
2018 யூலை, 19, 20, 21

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Empty Space Department Of Fine Arts University Of Jaffna

# THEATRE FESTIVAL



2018 July, 19, 20, 21

Kailasapathy Auditorium

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிமுகம்

தமிழ் அரங்கமரபில் அரங்க விழாவினைக் கொண்டாடுதல் என்பது நீண்ட பாரம்பரியம் மிக்கதொன்றாகும். பல்வேறு காரணங்களால் இம்மரபு அவ்வப்போது இடையூறுகளிற்கு உட்பட்டபோதும் அரங்குகளை அளிக்கை செய்யும் மரபு தொடர்கின்றது. நுண்கலைத்துறை கடந்த காலங்களில் சிறியளவிலாவது அரங்க விழாவினைக் கொண்டாடியது. இம்மரபுகளின் தொடர்ச்சியாகவே அரங்கவிழா 2018 அமைகிறது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைத்துறையும் வெறுவெளி அரங்கக்குழுவும் இணைந்து இவ்விழாவினை நடாத்துகின்றது. பல்கலைக்கழக மாணவர்களின் அரங்கத் தயாரிப்புக்கள் உட்பட தமிழ் மரபிலுள்ள பல்வேறு அரங்க மரபுகள் சிலவும் இங்கு ஆற்றுகை செய்யப்படுவதும் குறிப்பிடத்தக்கது. இவ்விழா அரங்கத்துறைசார் திறன்களை விருத்தி செய்வதற்க்கும் அரங்க வெளிப்பாடுகளினூடாக சமூகத்துடன் ஊடாட்டத்தினை ஏற்படுத்தவும் ஒன்றுகூடலுக்கும் வழிவகுக்கும்.

அரங்கில் பயில்நிலை மாணவர்களும் தொழிண்மைசார் கலைஞர்களும் இணைந்த வெளிப்பாடுகளாக இவ்விழாவில் நாடகங்கள் ஆற்றுகை செய்யப்படுகின்றன. இதன்மூலம் பயில்நிலை மாணவர்கள் அரங்கத்துறையில் தொழிண்மைத்தன்மை பெறுவதற்க்கும் விழாவாகும். இவ்விழா ஒரு சந்தர்ப்பமாக அமைகிறது. இவ் அரங்கவிழாவில் கௌரவிக்கப்படும் அரங்கவியலாளர்களான கலாநிதி குழந்தை. ம. சண்முகலிங்கம், ஏனெஸ்ட் தளையசிங்கம் மக்கின்ரையர், கலாநிதி அருட்தந்தை மரியசேவியர் அடிகளார் ஆகியோரின் அரங்கிற்கான பணி அளப்பெரியது. இப்பெருங்கலைஞர்களினைக் கௌரவிப்பதில் நாம் பெருமகிழ்வடைகிறோம்.

அரங்க விழாவில் சமகால அரங்கப் போக்குகளின் சவால்கள் தொடர்பான அரங்கத் துறைசார் வல்லுனர்களுடனான கருத்துப்பகிர்வு இடம்பெறுகிறது. இக்கருத்துப்பகிர்வுகள் எதிர்காலத்தில் அரங்கத் தயாரிப்புகள் தொடர்பான புதிய சிந்தனைகளிற்கான திறவுகோலாக அமையும்.

நாடகங்களே எமது சமூகத்தின் யதார்த்தத்தினை வெளிப்படுத்துவதற்கான மிகவும் தாக்கவன்மையான சாதனமாகும். அத்துடன் அரங்கில் அரங்கவெளிப்பாட்டிற்காக கலைஞர்கள் ஒன்றுகூடுவதற்கும், பார்வையாளர் ஒருசமூகமாக ஒன்றிணைவதற்கும், அரங்கின் மீதான ஆர்வத்தினை மேலும் அதிகரிக்கவும் இத்தகைய விழாக்கள் அத்தியாவசியமானவை. எதிர்காலத்தில எமது சூழலில் இத்தகைய அரங்கவிழாக்கள் மேலும் பல அரங்கக்கலைஞர்களதும் அரங்கவடிவங்களதும் சங்கமமாக அமையும் என எதிர்பார்க்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துணைவேந்தர் வாழ்த்துச் செய்தி

தமிழ்மொழிமூலம் நாடகக்கற்கையை தென்கிழக்காசியப் பிராந்தியத்தில் முதன் முதலில் அறிமுகப்படுத்திய வரலாற்றுச் சிறப்பு மிக்க எமது நுண்கலைத்துறை ஏறத்தாழ தனது மூன்று தசாப்தகால வரலாற்று வளர்ச்சியின் விளைபொருளாக அரங்கவிழா ஒன்றினை ஏற்பாடு செய்வதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். இதனை ஏற்பாடு செய்த நுண்கலைத்துறையினருக்கு பாராட்டுக்களைத் தெரிவிப்பதோடு எந்தவொரு கல்வி நடவடிக்கையும் சமூகம் சார்ந்தும், சமூகத்திற்கு என்றவகையிலும் நுண்கலைத்துறையின் சமூக ஊடாட்டமுடைய கற்றல் ஊடாட்டச் செயற்பாடுகள் மிக முக்கியமானவை. இந்த அரங்கவிழாவும் அத்தகையதொரு கல்வி முயற்சி என்ற வகையில் அரங்கக்கல்வி, தொழில்மைச் செயற்பாடுகள் என்பனவற்றை வலுமையுடையதாக்கும் என நம்புகின்றேன்.

**பேராசிரியர் இ. விக்கினேஸ்வரன்**
**துணைவேந்தர்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலைப்பீடாதிபதியின் வாழ்த்து

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடத்தின் நுண்கலைத்துறையின் நாடகமும் அரங்கியலும் பிரிவு ஆசிரியர்களினதும் மாணவர்களினதும் கூட்டு முயற்சியின் வெளிப்பாடாக அமையும் அரங்க விழா 2018 மிகச்சிறப்பாக நடைபெறுவதையிட்டு சம்பந்தப்பட்ட அனைவருக்கும் வாழ்த்துக்களை கூறிக்கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

சர்வதேச, பிராந்திய, தேசிய மற்றும் உள்ளூர் மட்டங்களில் கொண்டாடப்பட்டு வரும் மிகவும் பழமையானதும் பிரபல்யமானதுமான விழாக்களுள் அரங்க விழாவும் ஒன்றாகும். உயிரோட்டமான அரங்க விழாக்களின் மூலம் அவற்றில் நடிப்பவர்களுக்கும் பார்வையாளர்களுக்கும் இடையே நெருங்கிய இடைத்தொடர்பு இடம்பெறுகின்றது. இதன்போது பல்வேறு எண்ணங்கள், கருத்துக்கள், உத்வேகம் என்பவற்றின் பரிமாற்றம் இடம்பெறுகின்றது. பயம், நம்பிக்கை, சந்தோசம், ஆர்வம் போன்ற உணர்வுகளை வர்ணனையுடனும் பொருள் பொதியுடனும் கடத்தும் ஓர் ஊடகமாக இந்த அரங்கவிழா அமைவுறுகின்றது.

அரங்கவிழா 2018 பல்வேறுவகையான ஆற்றுகைகளுக்கூடாக சமூக, சுற்றாடல், சமய, கலாச்சார, வரலாற்று மற்றும் அரசியல் விடயங்களை பார்வையாளர்களுக்கு இலகுவாக சென்றடைவதற்கு புதுமையுடன் கலந்த பரவலை மேற்கொள்கின்றது. மேலும் இவ்விழாவானது மாணவர்களின் கற்றல் செயற்பாட்டின் பேறாகவும் தொழில் வாய்மையை விருத்தியாக்கும் தளமாகவும் பல்கலைக்கழகத்திற்கும் சமூகத்திற்கும் இடையான தொடர்பை பலப்படுத்தும் உபாயமாகவும் அமைந்துள்ளது. இவ்விழாவானது நிச்சயமாக மாணவர்களின் ஆக்கத்திறனுக்கும் சுயசிந்தனை விருத்திக்கும் விமர்சன அணுகுமுறைக்கும் ஓர் தளமாக அமையும்.

கலைப்பீடத்தில் நீண்டதொரு பாரம்பரியத்தைக் கொண்ட நாடகமும் அரங்கியலும் கற்பிக்கும் ஆசிரியர்களினதும் சமகால மாணவர்களினதும் மற்றுமொரு படைப்பாக அமையும் இந்த அரங்கவிழா ஆரோக்கியமான சமூகத்தை கட்டியெழுப்புவதற்கு வழிகோலும். அவ்வகையில் அரங்கவிழா2018 அதன் இலக்கை நிறைவேற்றி மிகச்சிறப்பாக நடைபெறுவதற்கு வித்திட்டு விருட்சமாக்கிய அனைவருக்கும் வாழ்த்துக்கூறுவதில் பெருமிதம் கொள்கின்றேன்.

**கலாநிதி.க.சுதாகர்**
**பீடாதிபதி**
**கலைப்பீடம்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துறைத்தலைவர் வாழ்த்து

நாகரீகங்கள் அவற்றின் கலைவடிவங்களால் அறியப்படுகின்றன. ஒரு சமூகத்தின், இயற்கையான ஆரோக்கியம் என்பது கலைகளில் தங்கியுள்ளது. கலை அறிவின் உடலாகவும் ஆறுதலின் ஓர் முறைமையாகவும் தொன்று தொட்டு இருந்து வந்துள்ளது. இலங்கையில் வேறு எந்தப்பிரதேசத்தையும் விட பல்வகைப்பாங்கான அரங்க முறைகள் யாழ்ப்பாணத்திலேயே அதிகம் காணப்பட்டன/ காணப்படுகின்றன. அதற்கு யாழ்ப்பாண-த்தின் பன்னலக்கூட்டான பண்பாடு, உருவாக்கம் காரணமாக அமைந்துள்ளது. தமிழரின் வரலாற்றில் ஏற்பட்ட ஒவ்வொரு சிறிய மாற்றமும் அரங்கத்தில் எதிரொலித்தது. தமிழ்க் கருத்தாடற் புலத்தின் பிரதான வடிவங்களில் அரங்கமே இருந்து வந்துள்ளது. இதனால் தமிழரின் சுயநிர்ணயத்திற்கான போராட்டத்தின் பிரதான கலைவடிவமாக 80களில் அரங்கம் உருவாகியது. இந்தப் பின்னணியில்தான் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நாடகமும் அரங்கியலும் என்ற கற்கைநெறி 1985இல் முதன்முதலாக அறிமுகமாகியது. தமிழரின் அடையாளம், அறிவுக்கட்டமைப்பு, தொடர்பாடல் முறை, பண்பாட்டு அரசியல் என்ற அடிப்படைகளை மீள்கண்டுபிடிப்பதிலும் புரிந்து கொள்வதிலும் அரங்கப்பேற்றை அடுத்த சந்ததிக்கு வழங்குவதிலும் இது முக்கிய பங்காற்றும் என எதிர்பார்க்கப்பட்டது. எனினும் புலம்பெயர்வுகளும் வெளிப்பாட்டுச் சுதந்திரத்தில் அரசாலும் பிற ஆயுதக் குழுக்களாலும் விடுக்கப்பட்ட அச்சுறுத்தல்களும் விதிக்கப்பட்ட தடைகளும் நாடகத் துறையை குறிப்பாக பல்கலைக்கழக நாடகத்துறையைப் பாதித்தது. இது நாடகக் கல்வியை ஏட்டுச்சுரக்காயாகவும், வேலையற்ற பட்டதாரிகளை உருவாக்கும் பல்கலை-க்கழக பாடநெறிகள் பலவற்றில் ஒன்றாகவும் மாறியுள்ளது.

அந்த வகையில் அரங்கை பயில்வு நிலைக்கு கொண்டு வருதல் அதற்கான தொழில்வாண்மைசார் பயிற்சிகளை வழங்கல், அரங்குசார் கருத்தாடல் புலத்தை விஸ்தரித்தல், அரங்கிற்கான பார்வையாளர் வட்டத்தை ஆழமாக்கல், பல்கலைக்-கழக மாணவர்களின் ஆளுமையை விருத்தி செய்தல், உள்ளூர் அரங்கப்பேற்றைப் பயில்வு நிலையில் பேணல் என்ற ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்ட நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு நுண்கலைத்துறை இவ்வாண்டில் நாடக விழாவினை முதன்முதலாக ஏற்பாடு செய்துள்ளது. நுண்கலைத்துறை யாழ்ப்பாணப் பல்கலைக்-கழகத்தில் உள்ள நாடகத்திற்கான உட்கட்டமைப்பு வசதிகளற்ற மனித வலுக்குறைந்த துறையாகும். கடந்த முப்பது ஆண்டுகளாக ஆளணி மற்றும் உட்கட்டமைப்பில் எந்தவித அடிப்படை வசதிகளுமற்று இயங்கி வருகிறது. எனினும் அது பல்கலைக்கழகத்தின் மிகுந்த செயற்பாடுகளும், சமூகப் பங்களிப்பும் சர்வதேச தொடர்புகளும் உள்ள ஓர் துறை என்பது பெருமை கொள்ளத்தக்கது. அந்த வகையில் மாணவர்கள், பழைய மாணவர்கள், விரிவுரை யாளர்கள் என்போரின் அயராத கடின கூட்டு முயற்சியின் அறுவடையாக இந்த நாடக விழா அமைகிறது. இது எதிர் வரும் காலத்தில் சமூகத்தினதும் பல்கலை-க்கழக நிர்வாகத்தினதும் பூரண ஆதரவுடன் வளர்த்தெடுக்கப்பட வேண்டிய முதல் முயற்சியாகும். கனவாக இருந்த நாடக விழாவை நனவாக்கிய அனைவருக்கும் வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கலாநிதி.தா.சனாதனன்**
**தலைவர்**
**நுண்கலைத்துறை**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விழாக்குழுத் தலைவரின் வாழ்த்து

அரங்க விழா 2018 யாழ்பல்கலைக்கழகம் நுண்கலைத்துறையினரால் யூலை மாதம் 19,20,21 ஆம் தினங்களில் கொண்டாடப்படுகிறது. மீளவும் ஒன்று கூடுவதற்கும், விழாக்களுக்குமான தேவை இருக்கின்ற எமது சமூகத்தில் இவ்வாறான விழாக்கள் முக்கியத்துவமுடையனவாகும்.

இவ்விழாவில் பதின்நான்கு நாடகங்கள் ஆற்றுகை செய்யப்படுகின்றன. கூத்துக்கள், இசைநாடகங்கள், தெருவெளி நாடகம், வில்லுப்பாட்டு, சமூக நாடகங்கள், சிறுவர் நாடகங்கள், சமகால ஆற்றுகைகள், என்ற பல்வேறு அரங்க மரபுகள் பிரதிநிதித்தவப்படுத்தப்படுகின்றன. அரங்கில் பயில்நிலையிலுள்ள மாணவர்களாலும், அரங்க தொழில்மைக் கலைஞர்களாலும் நாடக ஆற்றுகை செய்யப்படுகின்றன.

"அரங்கின் பிரச்சினைகளும் சவால்களும்" எனும் தலைப்பில் அரங்கின் பல்வேறு தளங்களிலும் செயலாற்றும் அரங்க கலைஞர்களினால் குழுநிலை உரையாடல் நிகழ்த்தப்படுகிறது. இது இலங்கையின் அரங்கப் போக்குகள் பற்றி புதிய சிந்தனைகளின் திறவுகோலாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இவ் விழாவின் முக்கியத்துவம் வாய்ந்த விடயமாக இம்முது பெரும் அரங்கவியலாளர்களான ஏனட்ஸ் தனபாலசிங்கம் மக்கின்ரயர், கலாநிதி. குழந்தை. ம. சண்முகலிங்கம், கலாநிதி. அருட்தந்தை மரியசேவியர் அடிகளார் ஆகியோர் கௌரவிக்கப்படுகின்றனர். இது இவ்விழாவினை மேலும் மேன்மைப்படுத்துகிறது. இவ்விழா அரங்கக்கற்கை மற்றும் அரங்கத் தொழில்மை விருத்திக்கும் களமாக அமையும் என நம்புகிறோம்.

**க.நவதர்ஷனி,**
**நுண்கலைத்துறை,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| நேரம் | 19.07.2018 | 20.07.2018 | 21.07.2018 |
|---|---|---|---|
| 9.00மு.ப - 11.00மு.ப | | **கலந்துரையாடல்:**<br>தலைப்பு:- "சமகால அரங்கின் சவால்களும் பிரச்சினைகளும்"<br>தலைமை: திரு. பா.அகிலன்<br><br>⊠ திரு.ஜோ.ம.கி.நிக்கிலஸ்<br>⊠ திரு.த. சிதம்பரநாதன்<br>⊠ திரு.ஜோ.ஜோன்சன் ராஜ்குமார்<br>⊠ திரு.க.அருந்தாகரன்<br><br>பொருளியல் விரிவுரை மண்டபம் | **கலந்துரையாடல்:**<br>தலைப்பு:- "சமகால அரங்கப் பயில்வுகளைக் கையாளுதல்"<br>தலைமை: திரு. ச.விமல்<br><br>⊠ திரு.பராக்கிரம நிரியெல்ல<br>⊠ கலாநிதி.க.ரதிதரன்<br>⊠ கலாநிதி அருட்தந்தை மரிய சேவியர் அடிகளார்<br>⊠ திரு.சஞ்சீயோத குருஸ்<br>⊠ கலாநிதி.தஞ்சுகா<br><br>பொருளியல் விரிவுரை மண்டபம் |
| 12.30பி.ப- 2.45பி.ப | | ⊠ மாயமான் (தெருவெளி நாடகம்)<br>இராமநாதன் மண்டப முன்றல்<br><br>⊠ நாய் கடிக்கும் கவனம்<br>⊠ இராவணேசன் யுத்த காண்டம்<br>⊠ சமகால நடனம்<br><br>கைலாசபதி கலையரங்கு | ⊠ சப்பிகள்<br>⊠ கடவுளும் குட்டியும்<br>⊠ பறத்தல் மறந்த பறவைகள்<br><br>கைலாசபதி கலையரங்கு |
| 4.00பி.ப - 5.30பி.ப | 5.00பி.ப<br>⊠ ஆரம்பவிழா<br>⊠ காத்தவராயன் கூத்து<br><br>கைலாசபதி கலையரங்கு | ⊠ அரிச்சந்திர மயான காண்டம்<br><br>கைலாசபதி கலையரங்கு | ⊠ சிலம்பின் சீற்றம் (வில்லுப்பாட்டு)<br>⊠ சுந்தரம் எங்கே?<br><br>கைலாசபதி கலையரங்கு |
| 6.15பி.ப - 8.30பி.ப | | ⊠ வசந்தன் கூத்து இராமநாதன் மண்டப முன்றல்<br>இராமநாதன் மண்டப முன்றல்<br><br>⊠ கடவுளும் குட்டியும்<br>⊠ கிரு நோனகே<br>"எந்தையும் தாயும்"<br>கைலாசபதி கலையரங்கு | ⊠ பறத்தல் மறந்த பறவைகள்<br>⊠ உறவுகள்<br><br>கைலாசபதி கலையரங்கு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## காத்தவராயன் சிந்து நடைக் கூத்து

**(40நிமிடங்கள்)**

***நெறியாள்கை: பொ.தை.யஸ்ரின் ஜெலூட்***

பூமியின் பாரத்தைத் தாங்கமுடியாத பூமித் தாய் தனது தங்கையான ஆங்காரமாரியிடம் சென்று பூமியின் பாரத்தை குறைக்குமாறு முறையிடுகிறார். அதற்காக முத்துமாரி அம்மன் சிவனிடம் இருக்கின்ற கொடிய நோய்களை எல்லாம் தரக்கூடிய கண்டசுரமாலையை பெற்றுக் கொண்டு அதை சிவன் மீதே போட்டு சோதித்துப் பார்க்கின்றார். நோயின் கொடுமையினால் சிவனார் வேதனைப்பட்டு, உதவிக்கு பார்வதி அம்மனை அழைத்து தனக்கு போடப்பட்ட முத்துக்களை எடுத்து விட முத்தமாரியிடம் சொல்லும் படி கேட்கிறார். பார்வதியின் சொல்லுக்கு கட்டுப்பட்ட முத்துமாரி சிவன் மீது போட்ட முத்துக்களை எடுத்து விடுகிறார். முத்துமாரியின் செயலினால் கோபமடைந்த சிவன், கிருஷ்ணரை அழைத்து அவளுக்கு கல்யாணம் இல்லை என்றும் குழந்தை இல்லை என்றும் கொடிய சாபங்களை இடுகிறார். இதனையறிந்த நாரதர் முத்துமாரியிடம் கோள்மூட்டி விடுகிறார். இதனை அறிந்த முத்துமாரி தவத்தின் பயனால் சிவனிடம் வரம் பெற்று ஆண் குழந்தை ஒன்றைப் பெற்றுக் கொள்கிறார். தன்னை ஆபத்திலிருந்து அக் குழந்தை காத்தபடியால் அதற்குக் காத்தான் என்று பெயர் சூட்டுகிறார். அவன் வளர்ந்து பெரியவனாகித் தாயின் விருப்பமின்றி ஆரியப்பூமாலையை மணம் புரிய ஆசை கொள்கிறான். எனினும் அவன் தாயை வெற்றி கொண்டு ஆரியப்பூமாலையை மணம் முடிக்கிறானா? இல்லையா? என்பதைக் கதையாகக் கொண்டதாகக் காணப்படும் இச் சிந்து நடையை முதன்மைபடுத்திய இக் கூத்தானது இலங்கையில் தமிழ்பேசும் மக்கள் வாழும் அனைத்துப் பிரதேசங்களிலும் வழக்கிலுள்ளது.

**உதவி நெறியாள்கை:** வி.விஜயரூபன்

**நடிகர்கள்:** வி.விஜயருபன், அ.ஷர்மி, ச.பிரியா, செ.ராகவேந்தன், கு.குகசீலன், வ.பிரகலாதன், ந.யாழினி, ப.ஜீவிதா, ந.டனுசியா, டே.கோகிலராஜ், தி.திலீனா, கு.பர்சிகா, செ.மிதுஷா

**பிற்பாடகர்கள்:** ஜெ.கீதாஞ்சனா, அ.தேணுகா, போ.கௌதமி, தே.விதூஷன், அ.குனோரியா, கு.டலக்சன், க. மதனிகா

**வாத்தியக் கலைஞர்கள்:** பொ.தை.யஸ்ரின் ஜெலூட், க.முருகையா, கு.குகசீலன், ப.ஜீவிதா, கு.டலக்சன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மாயமான்**
**(20 நிமிடங்கள்)**
***எழுத்துருவாக்கம்: சு. பிரநந்தன்***

"மாயமான்" எனும் வீதி நாடகம் "தற்கொலை" என்பதை மையப் பொருளாக கொண்டு அமைகின்றது. மனிதனிடம் இயல்பாகவே அமைந்துவிடக் கூடிய கோபம்,பயம்,தனிமைப்படு-தல், தர்க்கரீதியான சிந்தனைப்போக்கு என்ற இயல்புநிலைகளுக்குள் சிக்குண்டு சிந்தனா சக்தியைக் குறிப்பிட்ட விடயங்களுக்குள் சுருக்கி உளப்பிறழ்வுகளால் ஏற்படக்கூடிய விபரீத செயல்விளைவுகளிலிருந்து விடுபடுதல் அல்லது அதிலிருந்து அன்னியமாதல் தொடர்பில் பேசுவதாக அமைகின்றது. இத்தனை வன்போக்கு சிந்தனைக்கு ஒரு மனிதனை ஆளாக்கக் கூடியதும் மனமான்களை அழகுறுத்தி உள நெருடல்களை உருவாக்கும் "ஆனது" என்பதை மாயை என்றாக்கி அவரவர் ஆசை அவரவரக்கு அழகு என்பதால் "மாயமான்" என இவ் வீதி நாடகம் அமைகின்றது.

**எழுத்துருவாக்கம்:** சு. பிரநந்தன், நா. சபாநாயகம், து. நவரட்ணஜோதி, இ.கெங்காதரன்
**பாடல் வரிகள்:** திரு.த.நிரஞ்சலன்
**இசை:** சி.ரூபன்
**தயாரிப்பு:** கலைமகள் கலைக்கூடம், ஸ்கந்தபுரம், கிளிநொச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**நாய் கடிக்கும் கவனம்**
**(20 நிமிடங்கள்)**
***எழுத்துருவாக்கம், நெறியாள்கை: நி.ஹரான்***

இந்நாடகம் எஸ். ரி. அருள்குமாரின் "சாட்சி" எனும் நாடகத்தை தழுவி எழுதப்பட்ட ஓர் நகைச்சுவை நாடகமாகும். கடனாகப் பணத்தை வாங்கியவன், பணத்தைக் கொடுக்காது எவ்வாறெல்லாம் ஏமாற்றுகிறான் என்பதை இந்நாடகம் நகைச்சுவையாகக் கூறுகின்றது. பணத்தைக் கொடுக்காது போனதற்கான காரணங்களாக பணம் கொடுத்தவரின் புதுத் தொழில் பற்றிய விளக்கம், எந்த ஆதாரமும் இல்லாமல் பணம் கொடுத்ததனால் ஏற்பட்ட விபரீதம் என்பன இந்நாடகத்தில் நகைச்சுவையாக காட்டப்படுகின்றது.

**நடிகர்கள்:** இ.வினோதன், நி.ஹரன்
**இசை:** கோ.சத்தியன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**இராவணேசன் யுத்த காண்டம் - தென் பாங்குக் கூத்து**
**(20 நிமிடங்கள்)**
***நெறியாள்கை: பேராசிரியர். அ. சி. சூசை ஆனந்தன்***

இராமாயணத்தின் இராமன், இராவணன் யுத்தம் பற்றிய இக் கூத்தானது, தென் பாங்குக்குரியது. இராமனுடைய சேனை சீதையைக் காப்பாற்ற இராவணனுடைய சேனையுடன் யுத்தத்தில் ஈடுபட்டு இறுதியில் இரு பக்க சேனையும் நிலை குலைந்து போய் இராவணன் கொல்லப்படுதலைக் களமாகக் கொண்ட இக் கூத்தில் இராவணனின் மனைவி மண்டோதரிக்குச் சிறப்பிடம் தரப்படுகிறது.

**நடிகர்கள்:** அ.சி.சூசை ஆனந்தன், த.கஜன், தி.டுசியந்தன், யே.கபில்டன் போல், க.சர்மிலா, இ.சஜிந்திரன், ப.லெனின் லெம்பேட், ச.எவென்ரா பீரிஸ், செ.லூ.ஜனஸ்ரிகா, ம.தேவகுமாரி, செ.ருபிகா

**பாடகர்கள்:** க.ரஜிந்தன், யே.ரேக்கா, க.சுபோதினி, ச.டிலக்சினி, க.சகானா, ஜெ.திவ்வியா, யூ.வொ.றொசீனா, கு.கஜானன், ச.நிசாந்தன், க.பிரார்த்தனா

**வாத்தியக்கலைஞர்கள்:** செ.லெம்பேட், ச.உ.சாந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**இரைப்பை -சமகால நடனம்**
**(15நிமிடங்கள்)**
***ஆடற் கருத்துரு மற்றும் வடிவமைப்பு: து.மதிசாழினி***

அண்டத்தில் வாழும் மனித வாழ்க்கையின் பயணமே இரைப்பை. மனித வாழ்க்கையானது இவ் உலகத்திலுள்ளே உருவாகி உழன்று கொண்டிருக்கின்றது. அம் மனித வாழ்க்கைப் பயணமானது சில சமயங்கள் விரக்தி, சோர்வு, இயலாமையையும் ஏற்படுத்தி மறைந்து விடுகின்றது. அது போலவே மனித உடலின் முக்கிய உறுப்பாகிய இரைப்பை எமது பிறப்புத் தொடங்கி இன்றியமையாத சேவையை வழங்கி, அதன் பயணம் தொடர்ந்து, இறுதியில் மனித உடல் அழிந்த பின் அதுவும் மறைந்து விடுகின்றது. மனித வாழ்க்கையின் எல்லாமே இரைப்பையில் தான் தங்கி இருக்கின்றன. அதுவே மனித வாழ்க்கையின் அண்டம் எனக் கூறுகிறது. செல்வி துரைராசா மதிசாழினியின் பல வகைப்பட்ட அசைவுகளை உள்ளடக்கிய புதிய நடன வடிவம் இது.

**நடிகர்:** து.மதிசாழினி
**இசையமைப்பு:** து.மதிசாழினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**முல்லைமண் -சமகால நடனம்**
**(15நிமிடங்கள்)**
***ஆடற் கருத்துரு, நெறியாள்கை, வடிவமைப்பு: செ.ஸ்ரீகண்ணன்***

வீட்டிலிருந்து தொழில் நிமித்தமாக முல்லைத்தீவு நோக்கி பயணிக்கும் ஆற்றுகையாளர். அவரது நாளாந்த பேருந்து, ஈருருளி அனுபவங்கள் ஊடாக முல்லைத்தீவின் போர் வரலாற்றினை பலவகைப்பட்ட உடல் அசைவுகள், பாடல்கள், காண்பியக்கூறுகள் ஊடாக கட்டியெழுப்புகிறார்.

**நடிகர்:** செ.ஸ்ரீகண்ணன்
**இசையமைப்பு:** அ.அமுதசிந்துஜன்
**காட்சியமைப்பு:** க.ரிசிவர்மன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**நூலாடிகள் -சமகால நடனம்**
**(15நிமிடங்கள்)**
***எழுத்துருவாக்கம், நெறியாள்கை: யோ.ம.கி.நீக்கிலஸ்***

மனிதன் யாரோ ஒருவருடனோ அல்லது ஏதோ ஒன்றுடனோ கண்ணுக்கு புலனாகின்ற அல்லது கண்ணுக்கு புலனாகாத இழைகளால் பிணைக்கப்பட்டிருக்கிறான். அந்தப் பிணைப்பு ஒரு வழியைக் கொடுக்கலாமே தவிர திரும்பப் பெற முடியாதது. அதற்காக உழைக்கலாமே தவிர உருவாக்க முடியாது. காத்திருப்பும் காத்திருப்பின் இயலாத் தன்மையும், வாழ்வும் வாழ்வு கேட்கின்ற கேள்விகளும், மையங்களும் விளிம்பும் அவற்றுக்கிடையேயான போராட்டங்களும் என வாழ்வின் அடிப்படைகள் பற்றிப் பேசுகிறது இந்த நூலாடிகள்.

**நடிகர்கள்:** பா.மொறிஸ், வ.நிசாந், யோ.ம.கி.நீக்கிலஸ், அ.விஜய்
**இசையமைப்பு:** அ.கெனத்மேரியன், நெ.அனோச், யோ.யேசுதாஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**அரிச்சந்திர மயான காண்டம் - இசை நாடகம்**
**(90நிமிடங்கள்)**
***நெறியாள்கை: பொ.தை.யஸ்ரின் ஜெலூட்***

பாடுதலை முதன்மையாகக் கொண்ட நாடக மரபாக இசை நாடக மரபு காணப்படுகின்றது. 'உண்மை பேசல்' எனும் அறச் சிந்தனையை மையக் கதைக் கருவாகக் கொண்ட அரிச்சந்திர மயான காண்டம் ஈழத்து இசை நாடக மரபில் ஓர் தனிச்சிறப்பு வாய்ந்த அரங்க ஆற்றுகையாகும். அரிச்சந்திரன் கதையில் வரும் அயோத்தி காண்டம், காசி காண்டம், மயான காண்டம் பகுதிகளிலிருந்து, அதன் இறுதிக் காண்டம் இவ் ஆற்றுகைக்காக எடுத்துக்கொள்ளப்படுகிறது.

**நடிகர்கள்:** செ. இரத்தினகுமார், பொ.தை. யஸ்ரின் மினோசன், க. சரவணமுத்து, மா. தேவராஜா, ந. நஸ்னன், நி. பிஸ்மார்க், அ. றஜீவ்

**இசையமைப்பு:** த.றொபேட், க. முருகையா, பொ.தை.யஸ்ரின் மினோசன், ப..அமிர்தசிந்துஜன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**வசந்தன் கூத்து**
**(20நிமிடங்கள்)**
***நெறியாள்கை: கலாபூசணம் மு.சிவப்பிரகாசம்***

வசந்தன் கூத்தானது, யாழ்ப்பாணம், தெல்லிப்பளை தென் மயிலை என்னும் கிராமத்தில் வசித்த விசுவப்புலவரினால் உருவாக்கப்பட்டது. இதன் ஆடல் வடிவம் கோலாட்டத்தினை ஒத்ததாகக் காணப்படுகிறது. விவசாயத்துடன் இணைந்த தொழில்முறைப் பண்புகளையும், இயற்கையின் முக்கியத்துவத்தையும் வெளிப்படுத்துவதாக அமையும் இக் கலை வடிவம் உள்நாட்டு யுத்தம் காரணமாக இக் கிராம மக்கள் தமது சொந்த இடத்தைவிட்டு முப்பது வருடங்கள் வெளியேறிய நிலையில் குறிப்பிடத்தக்களவில் தளர்வு நிலை எய்தியுள்ளது. எனினும் தற்காலத்தில் உள்ளூரிலும் வெளிநாடுகளிலும் அரங்குடன் இணைந்து விழாக்களில் ஆரம்ப நிகழ்வாகவும் பண்பாட்டு வெளிப்பாட்டு நிகழ்வாகவும் இது இடம் பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

**நடிகர்கள்:** இ.ரஜிந்தினி, சே.ராகவேந்தன், வ.பிரகலாதன், ச.பாஹீம், கி.சவீதன், ஜெ.ஷாம்டிலக்ஷன், கு.குகசீலன், து.மதிசாழினி, ச.பமிலா றொசாந்தி குரூஸ், யோ. சொரூபினி, ர.வஷ்மிஜா, க.மதனிகா

**பிற்பாடகர்:** கு.உதயசுகந்தினி

**இசை:** பொ.தை.யஸ்ரின் ஜெலூட், கு.சிறீதர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**கடவுளும் குட்டியும்**
**(45நிமிடங்கள்)**
***எழுத்துருவாக்கம், நெறியாள்கை: க. ரதிதரன்***

ஊமத்தை முதன்மைப்படுத்திய இச் சிறுவர் நாடகம், யதார்த்த விரோதத் தன்மையுடையது. அவ்வகையில் நாடகத்தின் வேடவுடை, பாத்திரங்களின் உரையாடல், நடை என்பனவற்றில் புதிய பரிசோதனைகள் முயற்சிக்கப்பட்டுள்ளது. உடல்மொழி வெளிப்பாட்டை அதிகரிக்கின்ற பேச்சற்ற வகையில் வகுப்பறைப் பயிற்சியின் ஒரு வெளிப்பாடாக இந் நாடகம் தோன்றியது. பெரும்பாலும் இதை சிறுவர் நாடக வகைக்குள் உட்படுத்தலாம். இந் நாடகம் மகிழ்வளிப்பையும், செய்தி சொல்லலையும் அடிப்படையாகக் கொண்டது. மேலும், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய பிரதேசப் பாடசாலை மாணவர்களுக்காக இந்நாடகம் விசேடமாக மேடை எற்றப்பட்டது.

**நடிகர்கள்:** க.கஜமுகன், த.அருண், வி.விஜயரூபன், து.நித்திலா, த.சிந்துஜா, ச.சுஜீவன், ந.புரந்தகன், ப.ஜீவிதா, உ.டெஜீனா
**இசையமைப்பு:** இ.முருகையா, வி.திவ்யா, ச.சுஜீவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**எந்தையும் தாயும் (கிரு நோனகே)**
**(40நிமிடங்கள்)**
***எழுத்துருவாக்கம்: குழந்தை. ம. சண்முகலிங்கம், நெறியாள்கை: பாராக்கிரம நிரியெல்ல***

தொண்ணூறுகளின் யாழ்ப்பாணத்து வாழ்க்கைச் சூழ் நிலையைக் காட்டும் நாடகமாக அமையும் இந்நாடகம் பதினொரு பிள்ளைகளைப் பெற்று அவர்களை வெளிநாட்டிற்கு அனுப்பிவிட்டு தனிமையில் வாழும் முதியவர் பற்றியது. அவர் தனது பிள்ளைகளிடம் இருந்து கடிதத்தை எதிர்பார்த்துக் காத்திருப்பதும் தான் இறப்பதற்கு முன்னர் மூத்த மகனைக் காண வேண்டும் என்று காத்திருந்து அவனைக் காணாது இறப்பதும் ஆன சூழ் நிலையைச் சட்டகம் இடுகிறது.

**சிங்கள மொழிபெயர்ப்பு:** ஜனஹரலிய குழு
**நடிகர்கள்:** இராசையா லோகநாதன், சுமுது மல்லவராச்சி, அரோசா தரங்கனி, தேவன் சிறிலிவேர,
அஜந்த சாந்தகுமார, செல்வராஜ் லீலாவதி
**மேடை முகாமையாளர்:** விஜோதா லங்கபுர
**மேடைப்பொருட்கள்:** அமில டினேஸ் குமார
**மேடை ஒளியமைப்பு:** அஜந்த சாந்தகுமார
**வேடஉடை,ஒப்பனை:** செல்வராஜ் லீலாவதி, தேவன் சிறிலிவேர
**இசையமைப்பாளர்:** சுமுது மல்லவராச்சி
**ஒலியமைப்பாளர்:** விஜித்ஹேட்டேஜ்
**ஒப்பனை:** பாலித்த அபேயேலால், செல்வராஜ் லீலாவதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**சப்பிகள்**
**(30நிமிடங்கள்)**
***எழுத்துருவாக்கம், நெறியாள்கை: வி.விஜயரூபன்***

விளிம்பு நிலையிலிருக்கும் சமூகத்தின் இருப்பினை நிலைநிறுத்திக் கொள்ள அறிவை ஆயுதமாகக் கொள்ள வேண்டும் என நம்பிக்கை கொண்டு அதற்காகப் படித்த சமூகத்திடம் அப் பொறுப்பைக் கையளித்தலும், ஆனால் அவர்களோ மேற்கத்தேய மோகத்தினால் தமது பொறுப்பினை மறந்தவர்களாக போகின்ற கையறுநிலையை குறியீட்டு ரீதியாக யதார்த்த விரோதப்பாங்கில் இந் நாடகம் சித்திரிக்கிறது.

**நடிகர்கள்:** செ.ரூபிகா, க.சுபோதினி, ஜெ.திவ்வியா, ர.வஷ்மிஜா, ஜே.கபில்டன் போல், த.கஜன், வி.விஜயரூபன்


**பாடகர்கள்:** ந.யாழினி, ப.ஜீவிதா, வி.விஜயரூபன், ந.கஜன்

**இசையமைப்பு:** கண்ணன், வி.விஜயரூபன்

**வாத்தியக் கலைஞர்கள்:** கண்ணன், க.முருகையா, ச.பிரசாத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பறத்தல் மறந்த பறவைகள்

**(35நிமிடங்கள்)**

***எழுத்துருவாக்கம், நெறியாள்கை: அனா கத்தரின் கிளார்க்***

நான் உங்கள் எல்லோருக்கும் ஒரு கதை சொல்ல வேண்டும் பறவைகள் பற்றிய கதை. அது பறத்தலின் கதையும் கூடத்தான். முன்னொரு காலத்தில் வானம் முழுவதிலும் பறவைகள். அவை வானத்தை ஆள்வோர் என அழைக்கப்பட்டன. அவை சுதந்திரமாகப் பிறந்தவை. அந்த துயர் மிகுந்த விபத்து நடக்கும் வரை எல்லைகள் இல்லையென அவற்றிற்குத் தெரியும். அதனால் எங்கள் கதை பாதுகாப்பான வாழ்தலுக்காக பறத்தலை விடுதல் என்ற பறவைகளின் முடிவோடு ஆரம்பமாகிறது. அதிகார ஆசை கொண்ட தலைவன் முன்னெடுக்க அவை தமது பறக்கும் ஆற்றலை விரைந்து மறந்தமை மட்டுமன்றி தமது அனைத்து ஆசைகளும் கனவுகளும் மறக்கப்பட்டு விடுமோ என்றும் அவை பயம் கொண்டன. ஒரு நாள் ஓர் இளம் பெண் பறவை தமது மறக்கப்பட்ட அறிவைத்தேடிக் கண்டடைந்து மறுபடி பறக்கக் கற்றல் வரை இது தொடர்ந்தது. சுதந்திரம் பற்றியதும் சுய நிர்ணயம் பற்றியதுமான ஒரு கதையாக இது அமைகிறது.

**நடிகர்கள்:** இ.ரஜிந்தினி, சே.ராகவேந்தன், கி.சவீதன், கு.குகசீலன், து.மதிசாழினி, ச.பமிலா றொசாந்தி குருஸ், யோ. சொருபினி, ர.வஷ்மிஜா

**தமிழாக்கம்:** குழந்தை.மா.சண்முகலிங்கம்

**இசையமைப்பு:** இசுறு குமாரசிங்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**சிலம்பின் சீற்றம் - வில்லுப்பாட்டு**
**(30நிமிடங்கள்)**
***நெறியாள்கை: நா.மதியழகன்***

கோவலனும் கண்ணகியும் காவிரிப்பூம்பட்டினத்தில் புகழ் ஓங்கிய இரு வணிகர்களின் மக்களாகத் தோன்றியோர். இருவரும் மணந்துகொண்டு இனிதே இல்லறம் நடத்திவரும் காலத்தில் அந்நகரத்தில் கணிகையர் குடும்பத்தில் பிறந்த கலையரசி மாதவியின் அழகால் கவரப்பட்டு கோவலன் தன் மனைவியைத் தனியே விடுத்து மாதவி இல்லத்திலேயே வாழ்ந்தான்.ஒரு நாள் கடற்கரை மணல் வெளியில் இருவரும் அமர்ந்து யாழ் வாசித்துப் பாடும்போது கோவலனுக்கு மாதவி மீது ஐயம் தோன்றிற்று. அவன் தன் வீடு நோக்கிச் சென்றான். தன் குறைகளை வெளிப்படையாகக் கண்ணகியிடம் சொல்லி வருந்தினான். தன் செல்வம் குறைவுற்றது பற்றிப் புலம்பினான் இழந்த பொருளை மீட்க மதுரைக்குச் செல்ல விரும்பினான். கண்ணகி தன் விலையுயர்ந்த காற் சிலம்பை மூலப் பொருளாகக் கொடுத்தாள். இருவரும் கவுந்தியடிகள் என்னும் சமணப் பெண் துறவியின் துணையுடன் மதுரையை அடைந்தனர். கண்ணகி "மாதரி" என்னும் இடையர் குலத்துப் பெண் வீட்டில் அடைக்கலப்படுத்தப்பட்டாள். கோவலன் ஒரு சிலம்பை மட்டும் எடுத்துக் கொண்டு மதுரைக்குச் சென்றான். பாண்டிமாதேவியின் சிலம்பைத் திருடிய கள்வனாக ஒரு பொற்கொல்லனால் திருட்டுக் குற்றம் சாட்டப்பட்டு மன்னனால் கோவலன் கொல்லப்பட்டான். செய்தி அறிந்த கண்ணகி, பாண்டியன் அவையில் வழக்குரைத்துத் தன் கணவன் குற்றமற்றவன் என்று மெய்ப்பித்தாள். தன் பிழை உணர்ந்த பாண்டியன் உயிர் துறந்தான். சினம் அடங்காக் கண்ணகி மதுரையைத் தீக்கிரையாக்கினாள்.

**பங்குபற்றுவோர்:** நா.மதியழகன், அ.விஜயநாதன், த.றொபேட், ச.சிவசுப்பிரமணியம், ச.சர்வேஸ்வரன், மு.சடாச்சரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சுந்தரம் எங்கே?

**(60நிமிடங்கள்)**

***எழுத்துருவாக்கம்: பேராசிரியர்.க.கணபதிப்பிள்ளை, நெறியாள்கை: க. ரதிதரன்***

1950 ஆம் ஆண்டு பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை அவர்களால் எழுதப்பட்ட இந் நாடகமானது யாழ்ப்பாணப் பிரதேசத்தின் பண்பாட்டுப் பாரம்பரியத்தினையும், பேச்சு வழக்கினையும் முதன்மையாகக் கொண்டு எழுதப்பட்டது. இதன் கதைப் பொருளானது 1950களின் சமூக பொருளாதார நிலவரங்களின் பின்புலத்தில் உருவாகும் வர்க்க வேறுபாடுகள் - ஏற்றத்தாழ்வுகள் சார்ந்து குடும்பங்களுள் ஏற்படும் மோதல்கள் - சமூக உறவுகளின் உடைவுகள் பற்றியது.

**நடிகர்கள்:** ர.வஷ்மிஜா, செ.ராகவேந்தன், ச.பமிலா றொசாந்தி குரூஸ், ஜெ.ஷாம்டிலக்ஷன், ஞா.பிரசாந்தினி, கி.சவீதன், யோ.சொரூபினி, கு.குகசீலன், து.மதிசாழினி, வ.பிரகலாதன், ச.பாஹீம், ர.ரஜிந்தினி, ச.உ.சாந்தன்

**இசையமைப்பு:** கண்ணன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**உறவுகள்**
**(90நிமிடங்கள்)**
***எழுத்துருவாக்கம், நெறியாள்கை: குழந்தை ம. சண்முகலிங்கம்***

இந் நாடகம் 1980களில் எழுதப்பட்டது. பணத்தின் பெறுமதி இன்று மிகப் பெரியளவில் மாறியிருக்கிறது. ஆனால் சமூகக் குணாம்சங்கள் மாறாது இருப்பது இந்த நாடகத்தின் இன்றைய தேவையாகவும் இருப்பது என்பது ஒரு உண்மையாகும். கூட்டுக்குடும்ப முறையின் உடைவு இங்கு ஒரு குறிகாட்டியாக உள்ளது. நடந்து முடிந்து விட்ட, நடந்து கொண்டிருக்கிற பல விடயங்களின் ஆரம்பப் புள்ளிகளை இந்நாடகத்தில் காணலாம். புதிதளித்தல் மூலம் உருவாகும் பழைய உரையாடல் நாடக முறையின் பண்புகளை அடிப்படையாகக் கொண்டு இந்நாடகம் எழுதப்பட்டுள்ளது. இந்நாடகம் நன்கமைந்த நாடக முறையில் காணப்படுவதோடு யதார்த்தப்பண்பு கொண்ட வடிவமாகவும் காணப்படுகிறது.

**நடிகர்கள்:** க.ரதிதரன், வோ.யாழினி, நா.கிருபாகரன், த.ஸ்ரீபிரகாஷ், ந.தவசோதிநாதன், கே.ஜீவாயினி, ச.அனுசன்

**மேடை முகாமை:** நா.கிருபாகரன்

**காட்சிவிதானிப்பு:** ந.நவநீதன்

**ஒப்பனை:** ச.யசோதா

**இசை:** கண்ணன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குழுநிலைக்கலந்துரையாடல் I

### சமகால அரங்கின் சவால்களும் பிரச்சனைகளும்

**தலைமைதாங்குனர்: பாக்கியநாதன் அகிலன்** இவர் யாழ் பல்கலைக்கழகத்தின் நுண்கலைத்துறையின் கலை வரலாற்றில் முதுநிலை விரிவுரையாளராக பணியாற்றுகின்றார். தனது இளங் கலைமாணிப் பட்டத்தை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் (1995) முதுகலைமாணிப் பட்டத்தை பரோடாப் பல்கலைக்கழகத்திலும் (2001) பெற்றுக்கொண்டார். நாடக அரங்க வரலாறு, கவிதை, காண்பியக்கலைகள், மரபுரிமை என்பன தொடர்பில் எழுதி வருபவர்.

பங்குபற்றுனர்கள்: யோ.ம.கி.நீக்கிலஸ்
திரு. த. சிதம்பரநாதன்
திரு. ஜோ. ஜோன்சன் ராஜ்குமார்
திரு. க. அருந்தாகரன்

## குழுநிலைக்கலந்துரையாடல் II

### சமகால அரங்கப் பயில்வுகளைக் கையாளுதல்

**தலைமைதாங்குனர்: சாமிநாதன் விமல்** இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மொழியியல் ஆங்கிலத் துறையில் சிங்கள மொழி கற்பிக்கும் முதுநிலை விரிவுரையாளராக பணியாற்று-பவர். தனது கலைமாணி பட்டத்தை ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் பெற்றுக் கொண்டார். தனது முது தத்துவமாணி பட்டத்தினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பெற்றுக்கொண்டார். மொழி பெயர்ப்பு, இலக்கியம், அரசியல் சார் செயற்பாடுகளில் ஈடுபாடு உடையவரும் அவை தொடர்பில் எழுதி வருபவரும் ஆவார்.

பங்குபற்றுனர்கள்: திரு பராக்கிரம நிரியெல்ல
கலாநிதி. க. ரதிதரன்
கலாநிதி அருட்தந்தை மரியசேவிய அடிகளார்
திரு. சஞ்சியோகு குரூஸ்
கலாநிதி. தஞ்சுகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெறியாளர்கள் குறிப்பு



**பொ. தை. யஸ்ரின் ஜெலூட்** தற்போது பூநகரி கறுக்காய்த்தீவு மகா வித்தியாலயத்தில் நாடகமும் அரங்கவியல் ஆசிரியராகவும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில நாடகமும் அரங்கவியல் வருகை விரிவுரையாளராகவும் பணியாற்றுகின்றார். இவர் தனது நாடகமும் அரங்கக்கல்வி தொடர்பான கலைமாணிப்பட்டத்தினை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திலும் தனது முதுகலைமாணிப் பட்டத்தினை பாண்டிச்சேரியிலும் பெற்றுக்கொண்டார். அரங்கக்கல்வி, இசை, நெறியாள்கை, எழுத்துத்துறைகளில் ஈடுபாடு கொண்டவர்.



**சு. பிரநந்தன்** யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நாடக அரங்கியல் துறையில் சிறப்பு கலைமாணி பட்டத்தை பெற்றவர். 1970களில் உருவாக்கப்பட்ட கலைமகள் கலைக்கூடம் எனும் வன்னியைச் சேர்ந்த நாடக மன்றத்தை மீளக்கட்டியெழுப்பி அதன் இயக்குநராக பணிபுரிவதோடு வீதி நாடகம் உட்பட பல நாடக அரங்க செற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றார்.



**நித்தியானந்தன் கரன்** யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நாடக அரங்கத் துறையில் சிறப்புக் கலைமாணிப் பட்டம் பெற்ற இவர் தற்போது யாழ்ப்பாண 'முற்போக்கு அரங்க இயக்கம்' என்ற நிறுவனத்தை ஸ்தாபித்து நாடகங்களை ஆற்றுகை செய்து வருவதோடு நாடக எழுத்தாளராகவும், நடிகராகவும் திகழ்கின்றார்.



**அ. சி. சூசையானந்தன்** யாழ்ப்பாணப் பல்கலைகழகத்தின் புவியியல் துறையில் பேராசிரியராக பணிபுரிகிறார். அகஸ்ரின் சூசையானந்தன் அவர்கள் தனது புவியியல் பாடம் தொடர்பான சிறப்புக் கலைமாணி, முதுகலைமாணி, கலாநிதி பட்டங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பெற்றார். மன்னாரில் உள்ள நாடக மன்றங்களில் இணைந்து கூத்து ஆற்றுகையில் ஈடுபட்டு வருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**து. மதிசாழினி** தற்போது யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் நாடகமும் அரங்கக் கற்கைகளும் அலகில் மூன்றாம் வருடத்தில் கல்வி கற்கிறார். இவர் பல்கலைக்கழக நாடகங்களில் நடித்து வருகிறார். தற்போது சமகால நடனங்களில் ஈடுபாடு கொண்டிருக்கிறார்.



**செல்லத்துரை ஸ்ரீ கண்ணன்** அவர்கள் யாழ்ப்பாண பல்கலைகழகத்தின் நுண்கலைத்துறையில் கலைமானி பட்டத்தினை பெற்றுள்ளார். சென்னைப் பல்கலைக்கழகத்தில் முதுமாணி, முது தத்துவமாணி ஆகிய பட்டங்களை பெற்றுள்ளார். சிறந்த நடனக் கலைஞராகவும் சமகால நடன பயில்வுகளிலும் அதிக ஈடுபாடு கொண்டிருக்கின்றார். இலங்கை , இந்தியா, பிரான்ஸ், சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் சமகால ஆற்றுகைகளை மேற்கொண்டுள்ளார்.



**யோ.ம.கி.நிக்கிலஸ்** நாடகமும் அரங்கக்கலைகளில் கலைமாணிப் பட்டத்தினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பெற்றார். தற்போது இவர் கலை முகாமையாளர், நடிகர், நாடகத்திற்கான ஒளி வடிவமைப்பாளராகவும் தொழிற்பட்டு வருகிறார். அத்துடன் பல நிகழ்வுகளுக்கான முகாமையாளராகவும் உள்நாட்டிலும் பிறநாடுகளிலும் தொழிற்பட்டுக் கொண்டிருக்கிறார். தற்போது சமகால நடனங்களிலும் ஆர்வம் காட்டி வருகின்றார்.



**கலாபூசணம் முருகேசு சிவப்பிரகாசம்** அவர்கள் கட்டுவன் வசந்தன் கூத்து கலைஞராவார். இவர் வசந்தன் கூத்து ஆட்டத்தில் சிறந்து விளங்கும் மரபு ரீதியான கலைஞராவார். இவர் பல்வேறு போட்டிகளில் பங்கேற்று கலைச்சடர், கலாபூசணம் ஆகிய விருதுகளைப் பெற்றுள்ளார்.



**கதிரேசு ரதிதரன்** தற்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நுண்கலைத்துறையில் நாடக அரங்கக் கற்கைகளுக்கான விரிவுரையாளர். இவர் நாடக அரங்கக்கல்வி தொடர்பான கலைமாணிப்பட்டத்தினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும்(1996) முதுகலை மற்றும் கலாநிதிப் பட்டங்களை ஹைதராபாத் பல்கலைக்கழகத்திலும் (2005, 2017) பெற்றுக்கொண்டார். நாடகத்தயாரிப்பு, நடிப்பு முதலியவற்றில் தேர்ச்சியும் ஆய்வு நாட்டமும் உடைய இவர் நடிகரும், நெறியாளரும் ஆவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பராக்கிர நிரியெல்ல** 1974களில் முன்னெழும் இலங்கையில் சிங்கள நாடகக்கலைஞர்கள் வரிசையில் ஒருவர். கொழும்பில் இயங்கி வந்த லயனல் வென்ட் ஞாபகார்த்த மண்டபத்தில் தனது ஆரம்ப நாடகக்கல்வியி னை முடித்துக்கொண்ட இவர் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது வீதி நாடக்குழுவின் சிரேஷ்ட உறுப்பினராகவும் செயற்பட்டார். நாடகக்கலை மட்டுமன்றி திரைப்படம், தொலைக்காட்சிகளிலும் பல படைப்புகளை படை-த்துள்ளார். 2003 ஆம் ஆண்டு மக்கள்களரி கலாசார மன்றம் என்ற பெயரில் நாடக நிறுவனம் ஒன்றினை ஆரம்பித்து நாடு முழுவதும் நாடகத்துறைச் சார்ந்த பல்வேறு செயற்திட்டங்களை இதுவரை இவர் முன்னெடுத்து வருவ-தோடு அதன் பணிப்பாளராகவும் உள்ளார்.



**விஜயகுமார் விஜயரூபன்** தற்போது யாழ்ப்பாணப்பல்கலைக்-கழகத்தில் நாடகமும் அரங்கியலும் கற்கையின் நான்காம் வருட மாணவர். பாடசாலை நாடகங்களில் நடிகராகவும் நெறியாளராகவும் செயற்பட்டுள்ளார். பாரம்பரியக் கூத்துக்களில் ஈடுபாடு கொண்டவர்.



**நாகராசா மதியழகன்** யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் உடற்-கல்வி டிப்ளோமா பட்டத்தைப் பெற்றவர். தற்போது யா/வைத்தீஸ்வராக் கல்லூரியில் ஆசிரியராக பணி புரிந்து வருகிறார். பாடசாலைக் காலத்-தில் நாடகம், வில்லுப்பாட்டுப்போட்டிகளில் பங்குபற்றியுள்ளார். நாடகத்துறையில் நாடகக் கலாவித்தகர் பட்டத்தைப் பெற்றார். தற்போது உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் வில்லுப்பாட்டுக் குழுக்கள் அமைத்து ஆற்றுகை செய்து வருகின்றார்.



**குழந்தை. ம. சண்முகலிங்கம்** ஈழத்து தமிழ் நாடக உலகில் மிக பிரபல்யமாக அறியப்படும் அரங்கவியலாளர். இவர் 112 நாடக எழுத்-துருக்களையும், 43 மொழிபெயர்ப்பு நாடகங்களையும் எழுதியுள்ளார். பல நாடகங்களை நெறியாள்கை செய்துள்ளார். இவரின் நாடகங்களில் மிகவும் முக்கியமான நாடகங்களாக *'எந்தையும் தாயும்'*, *'அன்னை இட்ட தீ'*, *'மண் சுமந்த மேனியர்'*, *'வேள்வித்தீ'* போன்ற பல நாடகங்கள் காணப்படுகின்றன.



**அனா கத்தரின் கிளாட்** 1989ம் ஆண்டு ஸ்ருக்காட்டில் இசை மற்றும் ஆற்றுகைக் கலைக்கான பல்கலைக்கழகத்தின் பட்டத்தினைப் பெற்றார். மேலும் ரஸ்ய நடிப்புப் பள்ளியிலும் நாடகக் கற்கையை கற்றார். இவர் நடன ஆசியராகத் தொழிற்பட்டுள்ளதோடு பல அரங்கத் தயாரிப்புக்களையும் செய்துள்ளார். தற்போது சுதந்திரமான கற்பித்தலிலும் ஈடுபட்டு வருவதோடு பல்வேறு நாடுகளில் இவர் நாடக ஆற்றுகைகளில் ஈடுபட்டு வருகிறார். இவரின் பிரதான துறையாக பாவையரங்கு காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஏனஸ்ட் தளையசிங்கம் மக்கின்ரயர்

ஏனஸ்ட் தளையசிங்கம் மக்கின்ரயர் அவர்கள் 26.07.1934 ஆம் ஆண்டு தெல்லிப்பழை, யாழ்ப்பாணத்தில் பிறந்தவர். இவர் தனது பாட-சாலைக் கல்வியை யாழ்ப்பாணம் புனித பத்-திரிசியார் கல்லூரியிலும் இளமாணிக்கற்கையை பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் பயின்றவர். புனித பத்திரிசியார் கல்லூரியில் லோங் அடிக-ளாரது அரங்கச் செயற்பாடுகளால் ஈர்க்கப்பட்டார். மக்கின்ரயர் அவர்கள் தன்னை ஒரு ஆங்கிலப் புத்தாக்க அரங்கவியலாளராகக் கலைஉலகி-ற்க்கு அறிமுகப்படுத்திக்கொண்டார். 50 வருட-ங்களிற்கு மேலாக இலங்கையிலும் அவுஸ்ரேலியாவிலும் இவரது அரங்கப்பணி குறி-ப்பிட்டுச் சொல்லத்தக்கது. இவர் இலங்கையின் நவீன நாடக மரபில் மிகவும் முக்கியமானவரும் ஆரம்பகர்த்தாக்களில் ஒருவருமாக விளங்குகி-ன்றார். சிங்கள மற்றும் தமிழரங்கின் நவீன நெறியாளர்களில் முக்கியமான இவரால் பொரளை அக்கியூனஸ் கல்லூரியில் நடாத்-தப்பட்ட அரங்கப் பயிற்ச்சிப் பட்டறைகளின் மூலம் உருவாக்கப்பட்டவர்கள் என்பது குறி-ப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனஸ்ட் மக்கின்ரயர் அவர்கள் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மாணவனாக இருந்த காலங்களிலேயே நாடகங்களை நெறியாள்கை செய்யத் தொடங்கினார்.

நாடகம் என்பது இவ் உலகுடன் பிணைந்த ஒன்றாகவும் அப் பிணைப்பின் ஊடான ஈர்ப்பினடியாகவே அரங்கு வெளிப்பாடடைய வேண்டும் என்றும் அரங்கு என்பது வாழ்வின் பகுதியேயன்றி மகிழ்வூட்டலின் ஒரு பகுதியல்ல என்ற சிந்தனையை அடித்தளமாகக் கொண்டு தனது அரங்க வெளிப்பாடுகளை மேற் கொண்டார்.

இவரின் எழுத்துருக்கள் அதிகம் சமூக, அரசியல் பிரச்சினைகள் பற்றிப் பேசுவதாக அமையும். "Education of miss Asia"(1963) எனும் இவரின் எழுத்துரு கல்விப் பொதுத்தராதர உயர்தர மாணவர்களின் பாடப்பரப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளது. 1970களில்

1970களில் இலங்கையில் அரசியலை எள்ளி நகையாடி உரையாடுவதாகவுள்ள "Mad and Grotesque comedy"(1974) எழுத்துருவும் முக்கியமானது. இவரது நாடகத் தயாரிப்புக்களான "வெண்கட்டி வட்டம்", "ஒதெல்லோ", "கம்லெட்", "வெனிஸ் நகர வணிகன்" போன்றவை சாதரணர்களின் சிங்கள அரங்கில் ஒரு புதுப்பரிமாணத்தை ஏற்படுத்தியது. இவர் சிங்கள "கனுவத்தே கத்தாவ" என்னும் ஆற்றுகையில் நூறு தடவைக்கு மேல் நடித்திருக்கின்றமையானது இவர் ஒரு சிறந்த நடிகர் என்பதற்கான எடுத்துக்காட்டாகும்.

1974ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவுக்கு புலம்பெயரும் இவர் அங்கிருந்து கொண்டு இலங்கையில் இடம்பெறும் நிகழ்வுகளின் எதிர்வினையான நாடகத் தயாரிப்புகளில் ஈடுபட ஆரம்பித்தார். அவற்றுள் "Rasanagama's Last Riot" என்ற கொழும்பு பல்கலைக்கழகத்தில் ஆற்றுகை செய்யப்பட்ட நாடகம் 1983 காலப்பகுதியில் இலங்கையின் அரசியல், இனக் கலவரத்தினை அடிப்படையாகக் கொண்டது.

இவரது நாடக எழுத்துருக்கள் தமிழ்நாட்டில் கலாநிதிப்பட்ட ஆய்வாக சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் நாடகப்பட்டறையினை 2013இல் நிகழ்த்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இவ் அரங்க விழாவில் ஏனஸ்ட் தளையசிங்கம் மக்கின்ரயர் அவர்களைக் கௌரவிப்பதில் பெருமையடைகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கலாநிதி.குழந்தை ம.சண்முகலிங்கம்

குழந்தை ம.சண்முகலிங்கம் தமிழ் அரங்கில் மிக முக்கியமான ஒருவர். இவர் 15.11.1931ஆம் ஆண்டு திருநெல்வேலியில் பிறந்தார். ஐம்பது வருடங்களிற்கு மேலாக அரங்கப்பணி ஆற்றிவரும் இவர் 112 நாடக எழுத்துருக்களையும், 43 மொழிபெயர்ப்பு நாடகங்களையும் எழுதியுள்ளார். தனது ஆரம்பக்கல்வியினை நீர்கொழும்பு போலவத்த கத்தோலிக்க தமிழ் பாடசாலையிலும் இடைநிலைக் கல்வியை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியிலும் தொடர்ந்தார். 1957 ஆம் ஆண்டிலிருந்து 1987 வரை ஆசிரியராகவும் பின் 1987 தொடக்கம் 2004 ஆம் ஆண்டுவரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நாடகமும் அரங்கக்கலைகளும் விரிவுரையாளராகவும் பணியாற்றினார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அரங்கு ஒரு கல்வித்துறையாக நிலைபெறுவதற்கு இவர் பெரும்பணி ஆற்றினார். இன்று அரங்கியலில் கல்விசார் துறையில் பணியாற்றும் பெரும்பாலானோர் இவரது மாணவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

1957 இல் பெங்களூர் மற்றும் தமிழ் நாட்டிலும் உயர் கல்வியைத் தொடர்ந்து கலைமாணிப் பட்டப் படிப்பை மேற்கொண்டார். 1978 இல் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் நாடகத்துறை டிப்ளோமா கற்கைநெறியினைப் பூர்த்தி செய்தார். அரங்கு ஒரு கல்வித்துறையாகவும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றுகை மரபாகவும் நிலைபெறுவதற்கு பெரும்பங்கா-ற்றியமையைக் கௌரவிக்கும் வகையில் 2001இல் கிழக்குப் பல்கலைக்கழகம் சண்முகலிங்கம் அவர்களு-க்கு கலாநிதி பட்டம் வழங்கி கௌரவித்தது. நவீன நாடகம் பற்றிய கோட்பாடுகளையும், நுட்பங்களையும் தனித்துவமான அணுகுமுறையினூடாகக் கையாண்டு புதிய அரங்கவெளிப்பாடுகளை உருவாக்கினார்.

1950களிலிருந்தே கலையரசு சொர்ணலிங்கம் முதலியோருடன் நாடகங்களில் ஈடுபட்டு வந்தார். நாடக அரங்கில் முக்கிய பணிகளில் ஒன்றாக நாடக அரங்க கல்லூரியினை 1978 இல் ஸ்தாபித்தார். இதன் மூலம் அரங்கக் கலைஞர்களை ஒன்றிணைத்து நாடக பட்டறைகள், நாடக தயாரிப்புக்கள், நாடக விழாக்களை நடாத்தினார். பல்கலைக்கழகத்திலும், பாடசாலைகளிலும் நாடகம் ஒரு கல்வித்துறையாக வேண்டும் என்பதில் முன் நின்று பணியாற்றியவர். 1976இல் சிறுவர் நாடகம் என்ற எண்ணக்கரு வெளிப்படும் வகையில் முதன்முதலில் எழுதப்பட்ட நாடகம் கூடி விளையாடு பாப்பா என்பதாகும். இவரால் எழுதப்பட்ட நாடகங்களுள் மண் சுமந்த மேனியர், அன்னையிட்ட தீ, எந்தையும் தாயும் என்ற நாடகங்கள் அரங்கு பற்றிய புதிய வீச்சை, ஆச்சரிய-த்தை சமூகத்தில் தோற்றுவித்தது. அத்துடன் அவை கால-த்தின் அரசியல் நிலவரத்தின் அடையாளமாவும் இருந்தன.

அரசியலால் போரும் போரால் விளைவுகளுமாக அன்னையிட்ட தீ எனும் நாடகம் உருவாகிறது. வேள்வி-த்தீ என்பது இன்றுமொரு அரசியல் ஆக்கிரமிப்பின் சிதை-தப்பினை சித்தரிக்கிறது. யுத்தம் புலம் பெயர்வையும், பிரிவுகளையும், தனிமைப்படுத்தல்களையும் ஏற்படுத்திய-தன் விளைவாக எந்தையும் தாயும் தோன்றியது. யுத்தமும் இடப்பெயர்வின் இன்னலின் பின்னர் தோன்றிய வடிவமாக நரகொடு சொர்க்கம் அமைகிறது. யுத்தம் தன் இறுதி எல்லைகளின் முடிவை எவ்வாறு சந்திக்கிறது என்பதை "ஆர்கோலோ சதுரர்" எனும் நாடகம் பேசுகிறது.

சண்முகலிங்கம் அவர்கள் ஆங்கில, சீன, யப்பான், கிரேக்க மரபுகளில் காணப்படும் மிக முக்கியமான நாடகங்களை தமிழாக்கம் செய்துள்ளார். அவரது மண்சுமந்த மேனியார், எந்தையும் தாயும், வேள்வித் தீ ஆகிய நாடகங்கள் சண்முகலிங்கம் "Three plays" என்ற தலைப்பில் ஆங்கில மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளன. அவரது 87வது வயதில் அவரால் 1980 இல் எழுதப்பட்ட உறவுகள் எனும் நாடகமும் 1990களின் ஆரம்பத்தில் எழுதப்பட்ட எந்தையும் தாயும் எனும் நாடகத்தின் சிங்கள தயாரிப்பும் இந் நாடக விழாவில் ஆற்றுகை செய்யப்படுகிறது. சண்முகலிங்கத்தின் காலத்தில் நாங்க-ளும் வாழ்ந்தோம் என்பதில் பெருமைப்படுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கலாநிதி அருட்திரு நீக்கிலாப்பிள்ளை மரியசேவிய அடிகளார்

கலை வழி இறை பணி எனும் வாக்கின் வழியே தனது கலைப் பணியையும் சிறப்பாக அரங்கப் பயில்வுகளையும் செய்துவருகிறார் கலாநிதி அருட்திரு மரியசேவியர் அடிகளார் காத்திரமான அரங்க ஆற்றுகைகளினதும் அரங்கக்கலைஞர்களதும் இருப்பிற்காக இவர் பெரும்பங்காற்றியவர்.

அருட்கலாநிதி நீ.மரியசேவியர் அடிகள், 30.12.1939 ஆம் ஆண்டு இளவாலை என்னும் கிராமத்திலே பிறந்தார். தனது ஆரம்பக்கல்வியை இளவாலை றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்திலும் இடைநிலைக்கல்வியை புனித ஹென்றியாசர் கல்லூரி இளவாலை, யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியிலும் கற்றார். 1952 இல் இறைவாழ்விற்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். யாழ்ப்பாணம், கண்டி அம்பிற்றியா ஆகிய குருமடங்களில் குருத்துவக் கல்வியைப் பயின்றார், தனது இறையியல் இளமாணி முதுமாணிப் பட்டங்களை உரோமன் பல்கலைக் கழகத்திலும் பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1962ஆம் ஆண்டு உரோம் நகரில் தனது 22வது வயதில் திருச்சபை சட்டத்தின் படி பரிசுத்ததந்தை 23ஆம் அருளப்பரின் விசேட அனுமதியுடன் குருவாக திருநிலைப் பட்டம் பெற்றார். அப்போது உலகில் வயதில் மிகவும் குறைந்த மதகுருவாக இவர் திகழ்ந்தார்.

தமது புலமையை மேலும் விருத்தி செய்து 1972இல் மதுரை தமிழ்ச்சங்கத்தில் "வித்துவான் புலவர்" பட்டத்தினையும் 1974இல் பிரித்தானிய பல்கலைக்கழகத்தில் முதுகலைமாணி, கலாநிதிப் பட்டங்களையும் பெற்றார். 1979 இல் ஜேர்மன் பசாவு பல்கலைக்கழகத்தில் தனது இரண்டாவது கலாநிதிப் பட்டத்தினை சைவ சித்தாந்தம் ஆய்விற்காகப் பெற்றார். பல மொழிகளில் பரிச்சயமும் புலமையும் கொண்டவர். இவர் 1997 இல் ஜேர்மன் கத்தோலிக்க ஆன்மிக பணியகத்தில் "கலைத்தூது" எனும் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார். இவரது கலை இலக்கியப் பணிகளையும் கௌரவிக்கும் வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் "கௌரவ கலாநிதி" பட்டம் வழங்கி கௌரவித்துள்ளது.

பங்குத்தந்தையாக பல்வேறு இடங்களில் பணியாற்றிய அடிகளார் மனிதர்களால் உருவாக்கப்பட்ட சவால்களை கலைகளால் வெல்ல முடியும் என்ற தனது நம்பிக்கையை அரங்கச் செயற்பாடுகளினூடாக யதார்த்தமாக்கியவர். இதனை நிறைவேற்றுவதற்காக இளைஞர்களை கலைகளில் ஈடுபடுத்துவதற்கு முயற்சி செய்து இளைஞர்களின் கூட்டு ஆற்றலினையும் அதன் பலாபலன்களையும் அரங்கின் மூலம் சமூகத்திற்கு உணர்த்தியவர். தமிழ் பண்பாட்டுச்சூழலின் சூழமைவில் முதன்முறையாக திருப்பாடுகளின் காட்சிகளை ஆற்றுகை செய்தார், இம்மரபு இன்றும் தொடர்கிறது.

1966ஆம் ஆண்டு உரும்பிராய் திருமறைக் கலாமன்றம் உத்தியோகபூர்வமாக அடிகளாரால் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. தொடர்ந்து யாழ் நகரிலும் நிறுவி அதன் இயக்குனராகவும், வழிகாட்டியாகவும் இன்று வரை இருந்து வருகிறார். நாடக ஆளுமைகளை ஒன்றிணைத்து சமூக வேறுபாடுகளற்ற ஒரு நிறுவனயப்படுத்தப்பட்ட அரங்கச்செயற்பாடுகளிற்கு திருமறைக்கலாமன்றம் களமாக இருந்து வருகிறது. இலங்கையில் 20ற்கும் மேற்பட்ட கிளைகளுடனும் கனடா, இங்கிலாந்து, அவுஸ்ரேலியா, ஒல்லாந்து ஆகியநாடுகளிலும் புலம்பெயர் தமிச்சமூகத்தினை அரங்கின்மூலம் ஒன்றிணைக்கும் களமாகவும் திருமறைக்கலாமன்றம் செயற்பட்டு வருகின்றது. கலாமுற்றம், கலைக்கோட்டம், நிலையங்களூடாக நாடகம் தவிர்ந்த ஏனைய கலைகளின் வளர்ச்சிக்கும் இவர் பங்காற்றி வருகிறார். இவரைக் கௌரவிப்பதில் மகிழ்வடைகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விழாக்குழு**

தலைவர்: க.நவதர்ஷினி
முகாமையாளர்: ச.சுஜீவன்
செயலாளர்: ஸ்.கியானு
சமூகத் தொடர்பு: தே.சுதாகரன்
உறுப்பினர்கள்: ச.சுஜீவன்
து.மதிசாளினி
ந.புரந்தகன்

**ஆலோசனைக் குழு**

க.ரதிதரன்
பா.அகிலன்
சா.விமல்
செ.எ.வைதேகி
பொ.தை.யஸ்ரின் ஜெலூட்
யோ.ம.கி.நீக்கிலஸ்

**மேடைமுகாமையாளர்**

வி. திவ்யா
செ.ராகவேந்தன்

**மேடைமுகாமை உதவி**

திரு.இ.கெங்காதரன்
டே.கோகிலராஜ்
பு.உ.சாந்த்
அ.லக்சிகா
க.மதனிக்கா
செ.துஜீபன்
வி.சிந்துஜன்
ச.பாஹிம்
ந.புரந்தகன்
த.அருண்
க.கஜமுகன்

**காண்பிய வடிவமைப்பு**

செ.எ.வைதேகி

**காண்பியக்கட்டமைப்பு**

சு.பிரநந்தன்

**காண்பியஉதவி**

த.திவாகர்
சே.தயாளன்
செ.ராகவேந்தன்
கி.சவீதன்
து.மதிஷாலினி
யே.ஷாம்டிலக்ஷன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொ.தை.ஜஸ்ரின் ஜெலூட்
ஸ்.கியானு
வி.திவ்யா
தே.சுதாகரன்
ச.சுஜீவன்
ந.புரந்தகன்
ஞா.பிரசாந்தினி
ஏ.லக்சி
டே.கோகிலராஜ்
பு.உசாந்
ச.உசாந்தன்
செ.டிலக்சினி
ம.தேவகுமாரி
செ.ஜெனஸ்டிகா
தி.திலினா
ந.யாழினி
ப.ஜீவிதா
வி.விஜயரூபன்
ச.எவென்டா பீரிஸ்
ர.வஷ்மிஜா
ஜெ.கபில்டன்போல்
ச.ரொசாந்தி குரூஸ்

**ஒளியமைப்பு**

யோ.ம.கி.நீக்கிலஸ்

**ஒளியமைப்பு உதவி**

அ.கெனத்மேரியன்
நெ.அனோச்
யோ.யேசுதாஸ்

**விழாக் கையேட்டுக் குழு**

தா.சனாதனன்
ஸ்.கிருபாலினி
தே.சுதாகரன்
த.திலக்சன்
வி.முகுந்தன்

**நன்கொடையாளர்கள்**

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அதிமேதகு சனாதிபதி மைத்திரிபால சிறிசேன
திரு.தனராஜ் மயில்வாகனம் (மெற்றோ டிரவல்ஸ்)
சுதர்சன் ஜெகநாதன் (Radus 28 Software Solutions - Open source consultants and developers)
ற. குமரன் (MIS ICT College)
அருணாசலம் தயாநிதி (கனடா. Five Star Plastic)

**நன்றிகள்**

தர்மசிறி பண்டாரநாயக்க
ந.நிலாந்தன்
பா.மகாலிங்கசிவம்
ஜேர்மன் கலாச்சார மையம் (Goethe Insitute)
ஜேர்மன் தூதுவராலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org